பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
21 03 2024 **THURSDAY** 7 15 **PM**
ஆகாஷவாணி -செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, உலக நாடுகளின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை ஊக்குவிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

2. தேர்தல் பத்திரம் தொடர்பான அனைத்து விவரங்களும் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பாரத ஸ்டேட் வங்கி, உச்சநீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

3. மக்களவைத் தேர்தலுக்கான மூன்றாவது வேட்பாளர் பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ளது. கோவையில் மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலையும், நீலகிரியில் மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகனும் போட்டியிடுகின்றனர்.

4. அருணாச்சலப்பிரதேச சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடும் 34 பேர் கொண்ட முதல்கட்ட வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ayush Shetty** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்..

>>>>><<<<

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி, உலக நாடுகளின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை ஊக்குவிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், ஒருமித்த கருத்து கொண்ட நாடுகளுடன் இணைந்து உலக அளவில் அமைதியை ஏற்படுத்துவதில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி முக்கிய பங்காற்றும் என்று கூறினார்.

இதேபோல், நாட்டின் தொழில்நுட்ப வளர்ச்சியும் உலக நாடுகளுக்கு பெரிதும் உதவும் என்றும் திரு. ஜெக்தீப் தங்கர் குறிப்பிட்டார்.

தேசிய பாதுகாப்பு கல்லூரி ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்ச்சி, 15 நாட்கள் நடைபெறவுள்ளது.

**>>>>><<<<**

தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பான புதிய சட்டத்திற்கு தடை விதிக்க உச்சநீதிமன்றம் மறுத்துள்ளது.

இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரித்த நீதிபதிகள் திரு. **Sanjiv Khanna,** திரு. **Dipankar Datta** அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

மக்களவைத் தேர்தல் நடைபெறவுள்ள சூழ்நிலையில், இந்த சட்டத்திற்கு தடைவிதிக்க முடியாது என்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரச்சினையில் அரசியல் சாசன அமர்வு வழங்கிய தீர்ப்பில், தேர்வுக் குழுவில் யாரை நியமிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படவில்லை என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தேர்தல் ஆணையர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு எதிராக எந்தவொரு குற்றச்சாட்டும் இல்லை என்றும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

**>>>>><<<<**

தேர்தல் பத்திரம் தொடர்பான அனைத்து விவரங்களும் தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பாரத ஸ்டேட் வங்கி, உச்சநீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அந்த வங்கியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண பத்திரத்தில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை வழங்கும் தேர்தல் பத்திரத்தின் எண் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் இதில் இடம்பெற்றிருப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<

ஜனநாயகம் சுமுகமாக செயல்படுவதற்கு, பாரபட்சமற்ற முறையில் தேர்தல் நடைபெறுவது முக்கியம் என்று காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

தில்லியில் இன்று கட்சியின் முன்னாள் தலைவர்கள் திருமதி. சோனியாகாந்தி, திரு. ராகுல் காந்தி ஆகியோருடன் அவர் கூட்டாக செய்தியாளர்களிடம் பேசினார்.

வரும் மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் நிதியை பயன்படுத்துவதற்கு அதன் வங்கி கணக்குகளை முடக்கியதை ரத்து செய்ய வேண்டும் என்று திரு. மல்லிகார்ஜுன கார்கே கேட்டுக் கொண்டார்.

காங்கிரஸ் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டது இந்திய ஜனநாயகம் முடக்கப்பட்டதாகும் என்று திரு. ராகுல் காந்தி தெரிவித்தார்.

இந்நிலையில், புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு. **Sambit Patra,** வங்கிக்கணக்குகள் முடக்கப்பட்டதற்கு காங்கிரஸ் கட்சியே காரணம் என்று தெரிவித்தார்.

தேர்தல் ஆணையம் மற்றும் ஊடகங்கள் குறித்து திரு. ராகுல் காந்தி தெரிவித்த கருத்துக்கள் இந்திய ஜனநாயகத்தின் மாண்பை குலைப்பதாக அமைந்துள்ளது என்று பிஜேபி மூத்த தலைவர் திரு. ரவிசங்கர் பிரசாத் தெரிவித்தார்.

>>>>><<<<

மக்களவைத் தேர்தலுக்கான மூன்றாவது வேட்பாளர் பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ளது.

இதன்படி தமிழகத்தின் கோவை தொகுதியில் பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலையும், நீலகிரியில் மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகனும்,

தென்சென்னையில் திருமதி தமிழிசை சௌந்தரராஜனும், மத்திய சென்னையில் திரு. வினோஜ் பி செல்வமும், திருநெல்வேலியில் திரு. நயினார் நாகேந்திரனும் போட்டியிடுகின்றனர்.

மேலும், கன்னியாகுமரி தொகுதியில் திரு. பொன். ராதாகிருஷ்ணனும், வேலூரில் திரு. ஏ.சி. சண்முகமும், கிருஷ்ணகிரியில் திரு. நரசிம்மனும், பெரம்பலூரில் திரு. பாரிவேந்தரும் போட்டியிடவுள்ளனர்.

>>>>><<<<

மக்களவைத் தேர்தலுடன் அருணாச்சாலப் பிரதேச சட்டப்பேரவைக்கும் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், மொத்தம் உள்ள 60 தொகுதிகளில் 34 தொகுதிகளில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

காங்கிரஸ் கட்சியின் மத்திய தேர்தல் குழு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இங்குள்ள இரண்டு மக்களவை தொகுதிகளுக்கும் 60 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும் அடுத்த மாதம் 19ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

>>>>><<<<

சமூக ஊடகங்களில் ஆன்லைன் சூதாட்ட விளம்பரங்கள் மற்றும் நுகர்வோருக்கான சூதாட்ட விளம்பரங்களை வெளியிடக் கூடாது என்று தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

ஆன்லைன் சூதாட்டங்களில் குறிப்பிடத்தக்க அளவு நிதி பயன்பாடு மற்றும் இளைஞர்களின் சமூகப் பொருளாதார பிரச்சினைகள் இடம் பெற்றிருப்பதை கருத்தில் கொண்டு இந்த அறிவுரை வழங்கப்படுவதாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

பல்வேறு பிரபலங்கள் மூலம் சூதாட்ட நடவடிக்கைகளை முன்நிறுத்தி விளம்பரங்கள் வெளியாவதுடன், இளைஞர்களை கவரும் வகையிலான வாசகங்கள் இடம்பெறுவது கவலை

அளிக்கக்கூடியது என மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் தெரிவித்திருப்பதையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

>>>>><<<<

தமிழகத்தில் அஇஅதிமுகவின் இரண்டாவது மற்றும் இறுதி வேட்பாளர் பட்டியலை அக்கட்சியின் பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி சென்னையில் இன்று வெளியிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கட்சியின் உயர்நிலைக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் வேட்பாளர்கள் இறுதி செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

தமிழகத்தின் உரிமைக்காக அஇஅதிமுக தொடர்ந்து குரல் கொடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதனை முன்நிறுத்தியே மக்களவைத் தேர்தலை அஇஅதிமுக எதிர்கொள்ளும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.

>>>>><<<<

மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில் தேர்தல் ஆணையத்தின் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாடுமுழுவதும் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தின் தேனி மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் 200-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜ்குமார் 38 செகண்ட்ஸ்)

இதேபோல், விருதுநகர் மாவட்டத்தில் திருநங்கைகள் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

(வாய்ஸ் பைட் - திருநங்கை 17 செகண்ட்ஸ்)

>>>>><<<<

புதுச்சேரியில் அடுத்த மாதம் 19ஆம் தேதி மக்களவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அங்கு ஒருவர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

வேட்புமனு தாக்கல் தொடங்கிய இரண்டாவது நாளான இன்று சுயேச்சை வேட்பாளர் ஒருவர் மனுதாக்கல் செய்ததாக மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. குலோத்துங்கன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட செலவினப் பார்வையாளர்கள் மூன்று பேர், மணிப்பூர் சென்றடைந்தனர்.

இதுகுறித்து மணிப்பூர் இணை தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. **Ramananda** எமது செய்தியாளரிடம் பேசுகையில், இந்தப் பார்வையாளர்கள் நாளை முதல் அரசியல் கட்சி வேட்பாளர்களின் பிரச்சாரத்தை கண்காணிப்பார்கள் என்று கூறினார்.

இவர்கள் தவிர, காவல்துறை பார்வையாளர்கள் மற்றும் பொதுப் பார்வையாளர்கள் 3 பேர் விரைவில் மணிப்பூர் வரவிருப்பதாகவும் திரு. **Ramananda** தெரிவித்தார்.

>>>>><<<<

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலை கைது நடவடிக்கைகளிலிருந்து பாதுகாக்க உயர்நீதிமன்றம் மறுத்துவிட்டது.

நீதிபதிகள் திரு. சுரேஷ்குமார், திரு. மனோஜ் ஜெயின் ஆகியோர் கொண்ட அமர்வு, வழக்கின் தற்போதைய நிலையில் நிவாரணம் வழங்க இயலாது என்று தெரிவித்தனர்.

அமலாக்கத்துறை தமக்கு வழங்கிய ஒன்பது சம்மன்கள், சட்டவிரோதமானது என்று கூறி திரு. அரவிந்த் கெஜ்ரிவால் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்த நிலையில், நீதிபதிகள் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளனர்.

>>>>><<<<

வியட்நாம் அதிபர் பதவியிலிருந்து திரு **Vo Van Thuong** ராஜினாமா செய்துள்ளார்.

கட்சி விதிகளை மீறி, செயல்பட்டது தெரியவந்ததால், ஓராண்டுக்குப் பின்னர் அதிபர் பதவி விலக வலியுறுத்தப்பட்டதாக வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் முறைகேடு குற்றச்சாட்டு காரணமாக, பதவி விலகும் இரண்டாவது அதிபர் திரு. **Vo Van Thuong** ஆவார்.

>>>>><<<<

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ayush Shetty** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 21-16, 13-21, 23-21 என்ற செட்கணக்கில் சீன தை-பேயின் **Huang Yu**–வை வென்றார்.

>>>>><<<<

**Beirut** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனுஷ் - தியா இணை பட்டம் வென்றது.

எகிப்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை இந்தியாவின் மனவ் தாக்கர் - அர்ச்சனா காமத் இணையை வென்றது.

>>>>><<<<